# 2 தெசலோனிக்கேயர் அறிமுகம்

Peter Evensen, CLC USA

## ஆசிரியர்

இந்த நிருபத்தின் ஆரம்பத்திலேயே பவுல் தன்னை இந்த நிருபத்தின் ஆசிரியர் தான்தான் என்கின்றார்:

> **2 தெசலோனிக்கேயர் 1:1** "பவுலும், சில்வானும், தீமோத்தேயும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்குள்ளும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது:"

இந்த நிருபத்தின் முடிவில் அவர் எழுதினார்:

> **2 தெசலோனிக்கேயர் 3:17** "பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன், நிருபங்கள்தோறும் இதுவே அடையாளம்; இப்படியே எழுதுகிறேன்."

1 தெசலோனிக்கேயர் நிரூபத்தைப் போல அதே அளவில் இந்த நிரூபமானது கூட சில்வான் (சீலா) மற்றும் தீமோத்தேயு மூலமாக, பவுலினுடைய இரண்டாவது மிஷினரி பிரயானத்தில் தெசலோனிகேயாவை முதன் முதல் பார்வையிட்டபோது அவருடைய கூட்டாளிகளாக இருந்த இவர்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

## பெற்றுக் கொள்பவர்கள் மற்றும் பின்னணி

2 தெச 1:1ல் இந்த நிருபத்தை யாருக்கு எழுதுவதாக அவர் சொல்கிறார். வசனம் 1: "தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது." இந்த தெசலோனிக்கேயா சபையினுடைய சரித்திரம் மற்றும் பின்னணியை 1 தெசலோனிக்கேயர் பாடத்தில் பார்க்கவும்.

## சந்தர்பம் மற்றும் உத்தேஷம்

தெசலோனிக்கேயா சபையை குறித்த விசேஷமான வார்த்தைகளை பவுலினுடைய முதல் நிரூபத்திற்குப் பின்று பெற்றுக் கொண்டதாக காணப்படுகிறது. கர்த்தருடைய வருகையை குறித்தும் மற்றும் அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற தொடர் உபத்திரவத்தைக் குறித்தும் இன்னும் ஒரு சில கேள்விகள் உடையவர்களாக அவர்கள் இருந்தனர்.

பவுல் இந்த 2ம் நிருபத்தை எழுதினதின் நோக்கம் :

- அதே அளவில் அதைப் போலவே அவர்கள் உபத்திரவத்தை சந்திக்க நேரிடும் என்று உற்சாகப் படுத்தினார்.
- கர்த்தருடைய வருகையைக் குறித்து முதலாம் நிருபத்தில் பவுல் என்ன எழுதினாரோ சரியாக ஒரு தப்பாக அர்த்தம் செய்து கொண்டனர் அல்லது சரியான முறையில் புரிந்து கொள்ளவில்லை அல்லது ஒருவேளை பவுல் போதித்தவைகளுக்கு விரோதமாக கள்ள போதனைகளை போதிப்பவர்களை எதிர்த்து போரிடுவதாக இரண்டில் ஒன்றாக இருக்கும்.
- விக்கிரக ஆராதனையின் தொடரும் பிரச்சினைகளைப் பற்றி தன்னுடைய எண்ணங்களை இந்த நிருபத்தின் மூலம் எழுதிகிறார்.

## இந்த நிரூபம் எழுதப்பட்ட காலம்

பவுல் கொரிந்துவில் இருந்தபோது முதலாம் நிருபம் எழுதப்பட்ட பின் மிகவும் குறுகிய காலத்தில் அநேகமாக சில்வானும் தீமோத்தேயுவும் அவருடன் கூட இருந்த வேளையில் இக்கடிதம் எழுதப்பட்டது.

பவுல் தன்னுடைய இரண்டாம் மிஷனரி பிரயாணமாக கொரிந்துவை விட்டுப் போகும்போது சில்வான் (சீலா) மற்றும் தீமோத்தேயு அவருடன் இல்லை.

இந்த நிருபத்தின் உள்ளே அடங்கியுள்ள பொருளடக்கமானது முதலாம் நிருபத்தின் பொருளடக்கத்தைப் போலவே இருக்கிறது. ஏனென்றால் இந்த காரணங்களினால், அநேகமாக இந்த நிரூபமானது கொரிந்துவில் பவுல் தங்கியிருந்த 18 மாத காலங்களில், முதலாம் நிரூபம் எழுதப்பட்ட குறுகிய காலத்தில் அநேகமாக அவர் தங்கியிருந்த முடிவான காலங்களான 53ADயில் இது எழுதப்பட்டது. மூன்றாம் நிரூபமான 2 தெசலோனிக்கேயர் அப்போஸ்தலனாகிய பவுல் மூலம்தான் எழுதப்பட்டது என்பது நிரூபமணமாகிறது.

## நிருபத்தின் உள்ளேயுள்ள பொருளடக்கம்

இந்த நிருபமானது மூன்று மிக முக்கிய பிரிவுகளாக பிரிக்கப் படுகிறது:

## 1. வாழ்த்து மற்றும் உற்சாகப் படுத்துதல் (1:1-1:12)

முதலாம் நிருபத்தில் இருக்கிறதைப் போலவே இதிலும் வாழ்த்துதல் இருக்கிறது (1:1:-2), (1தெச 1:1 ஒப்பிட்டு பார்க்கவும்) தெசலோனிக்கேயர்களின் விசுவாசம் மற்றும் அன்பிற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவதிலிருந்து இந்த நிருபத்தை பவுல் ஆரம்பிக்கின்றார்.

> **2 தெசலோனிக்கேயர் 1:3-4** "சகோதரரே, நாங்கள் எப்பொழுதும் உங்களுக்காக தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்; உங்கள் விசுவாசம் மிகவும் பெருகுகிறபடியினாலும், நீங்களெல்லாரும் ஒருவரிலொருவர் வைத்திருக்கிற அன்பு அதிகரிக்கிறபடியினாலும், அப்படிச் செய்கிறது தகுதியாயிருக்கிறது. நீங்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும் உபத்திரவங்களிலும் பொறுமையையும் விசுவாசத்தையும் காண்பிக்கிறதினிமித்தம் உங்களைக்குறித்து நாங்கள் தேவனுடைய சபைகளில் மேன்மைபாராட்டுகிறோம்." (1 தெச 1:2 -3 ஒப்பிட்டு பார்க்கவும்)

தெசலோனிக்கேயர்களை யாரெல்லாம் உபத்திரவப் படுத்தினார்களோ அவர்களெல்லாரையும் தேவன் நியாயம் தீர்ப்பார் மற்றும் தண்டிப்பார் மற்றும் அவர்களுடைய வருத்தங்களை நீக்குவார் என்று பவுல் பிறகு அவர்களுக்கு நிச்சயப்படுத்தினார்.

> **2 தெசலோனிக்கேயர் 1:6-9** "உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடேகூட இளைப்பாறுதலையும் பிரதிபலனாகக்கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறதே. தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது,"

அவரும் அவருடைய கூட்டாளிகளும் அவர்களுக்காக எப்போதும் ஜெபம் செய்வதாக தெசலோனிக்கேயர்களுக்கு சொல்வதின் மூலம் இந்த பாகத்தை முடிக்கிறார்.

> **2 தெசலோனிக்கேயர் 1:11-12** "ஆகையால், நம்முடைய தேவனும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் அளிக்கும் கிருபையின்படியே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் உங்களிடத்திலும், நீங்கள் அவரிடத்திலும் மகிமைப்படும்பொருட்டாக; நம்முடைய தேவன் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம்."

## 2. கர்த்தருடைய இரண்டாம் வருகை (2:1-17)

இரண்டாம் பிரிவில் பவுல் கிறிஸ்துவினுடைய இரண்டாம் வருகையை குறித்துப் பேசுகிறார். இதை ஒரு தலைப்பாகவே பவுல் முதலாம் நிருபத்தில் தன்னுடைய எண்ணங்களாக பதிவு செய்கிறார். ( 1 தெச 4:13-5:11) கிறிஸ்து ஏற்கனவே வந்துவிட்டார் தெசலோனிக்கேயா விசுவாசிகள் பின்னால் நின்றுவிட்டனர் என்று ஒரு சிலர் போதிப்பதாக காணப்படுகிறது:

> **2 தெசலோனிக்கேயர் 2:1-2 "**அன்றியும், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது என்னவென்றால், ஒரு ஆவியினாலாவது, வார்த்தையினாலாவது, எங்களிடத்திலிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிருபத்தினாலாவது, கிறிஸ்துவினுடைய நாள் சமீபமாயிருக்கிறதாகச் சொல்லப்பட்டால், உடனே சஞ்சலப்படாமலும் கலங்காமலும் இருங்கள்.**"**

எவராகிலும் கள்ள போதனைகளை பரப்புவர்கள் பவுலின் மூலம் நிரூபங்களை பெற்றதாக நடிக்கிறவர்கள் என்று காணப்படுகிறது.

ஒரு சிலர் தவறாக எண்ண இடமளிக்காத காரியங்கள் நடைபெறும் வரைக்கும் கர்த்தர் திரும்பவும் வரமாட்டார் என்று பவுல் பிறகு தெசலோனிக்கேயர்களுக்கு சொன்னான்.

> **2 தெசலோனிக்கேயர் 2:3** "எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது."

யோவான் அந்திகிறிஸ்து என்று சொன்ன ஒருவனைப் பற்றி பவுல் இங்கே மிக முக்கியமான தகவல்களை நமக்கு கொடுக்கின்றார்.

1. **“அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவன் எண்ணப்படுவது எதுவே ஆராதிக்க ப்படுவதெதுவோ, அவைஎல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவனைப்போல் உட்கார்ந்து, தன்னைத் தானே தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்.” (2:4)**

அந்திக்கிறிஸ்து ஒரு மத தலைவனாக இருப்பவன், தேவனுடைய ஆலயத்தில் உட்கார்ந்து இருப்பவன், அவன் கிறிஸ்துவினுடைய வேலையைச் செய்ய உரிமை கொண்டாடுபவன், ஆனால் அவன் உண்மையாக கிறிஸ்துவின் வலிமையான எதிரி.

2. **“அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தனுடைய செயலின்ப டி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்.” (2:9)**

வேறாக விழுந்து போகுதலை “விளைவிப்பதை கொண்டு வருவதில் வெற்றியடைந்தவனாக அந்திக்கிறிஸ்து இருக்கின்றான். ஏனென்றால் அற்புத அடையாளங்கள் செய்வதற்கு சாத்தான் அவனுக்கு உதவி செய்கின்றான்.

3. **“அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிளுருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்” ( 2:7-8)**

இந்த அந்திக் கிறிஸ்து பவுலினுடைய நாட்களில் கிரியை செய்கிறவனாக இருந்தான் மற்றும் கர்த்தருடைய வருகை மட்டும் தொடர்ந்து கிரியை செய்கிரவனாகவும் இருக்கின்றான்.

அநேகர் நம்புகிறபடி மேலே சொல்லப்பட்ட விஷயங்கள் அந்திக்கிறிஸ்து ஒரு அரசியல் தலைவன் அல்ல என்பதை தெளிவுப் படுத்துகிறது. அந்திக் கிறிஸ்து ஒரு விசேஷமான தனிப்பட்ட நபர் அல்ல என்பதைக் கூட இது காட்டுகிறது. பதிலாக அது ஒரு மத தலைவராக அலுவலகத்தில் (அ) காரியாலத்தில் அதிகாரியாக தொடர்ந்து இருப்பவனாக அல்லது சபையில் பதவி அந்தஸ்தை வகிப்பவனாக தொடர்ந்து இருக்கிறான். பாவ மனுஷனைப் பற்றி விவரித்து இங்கே சொல்லப்பட்டவைகள் போப்பாண்டவர் காரியாலத்தில் நிறைவேற்றப் படுகிறதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

பவுல் இந்த பிரிவு பாகத்தை ஊக்கபடுதுதலுடன் முடிக்கிறார். அநேகர் சத்தியத்தை நிராகரிக்கிறார்கள், (2:10-12) ஆனால் தேவன் தெசலோனிக்கேயர்களை விசுவாசத்திற்கு மற்றும் சத்தியத்திற்கு அழைத்தார்:

> **2 தெசலோனிக்கேயர் 2:13-14** “கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்.”

பிறகு பவுல் தெசலோனிக்கேயர்களை ஊக்கப்படுத்துகிறார்:

> **2 தெசலோனிக்கேயர் 2:15** “ஆகையால், சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள்.”

மற்றும் தேவன் தெசலோனிக்கேயர்களை ஆறுதல் படுத்தும்படியும் மற்றும் அவர்களை நிலைநிருதும்படிக்கும் பவுல் அவர்களுக்காக ஜெபம் செய்தார் (2:16-17).

## 3. பொதுவான ஊக்கபடுதுதலும் மற்றும் முடிவான தீர்மானமும் (3:1-18)

இந்த பிரிவில் பவுல் அவர், சில்வான் மற்றும் தீமோத்தேயு தேவனுடைய வார்த்தையை தடையின்றி பரப்பவும், மற்றும் துஷ்டர்களுக்கும் மற்றும் தீமையான மனிதர்களுக்கும் தேவனுடைய வார்த்தை சென்றடையவும் ஜெபிக்கும்படி பவுல் இந்த பிரிவில் கேட்கிறார். தீமையினின்று விளக்கி காப்பாற்றுகின்ற தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கும்படி பவுல் தெசலோனிக்கேயர்கள் ஊக்கப்படுத்துகிறார்.

கடைசி, திருச்சபையில் யார் யாரெல்லாம் வேலை செய்ய மறுத்து சோம்பேறிகளாக இருக்கின்றார்களோ அவர்களை பவுல் கடுமையாக எச்சரிக்கிறார். முந்தைய முதலாம் நிருபத்தில் இந்த பிரச்சினையை விரிவாக குறிப்பிட்டு இருக்கிறார். (1 தீமோ 4:11-12) அவருடைய முதல் நிருபத்தில் அவர் ஒவ்வொருவரும் வேலை செய்ய வேண்டும் மற்றும் யாரும் மற்றவர்களை சார்ந்து வாழக்கூடாது என்று ஊக்கபடுத்துகிறார். இந்த நிருபத்தில் பவுல் மிகவும் அதிகமாக பலவந்தத்தோடு கடிந்து கொண்டு புத்தி சொல்கிறார்.

> **2 தெசலோனிக்கேயர் 3:6-8** “மேலும், சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரரையும் நீங்கள் விட்டு விலகவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம். இன்னவிதமாய் எங்களைப் பின்பற்றவேண்டுமென்று நீங்கள்

அறிந்திருக்கிறீர்களே; நாங்கள் உங்களுக்குள்ளே ஒழுங்கற்று நடவாமலும், ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம்.”

**2 தெசலோனிக்கேயர் 3:10** “ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே.”

**2 தெசலோனிக்கேயர் 3:14-15** “மேலும், இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால், அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்.”

பவுல் தனக்குத் தானே நல்ல மாதிரியாக, சில்வான் மற்றும் தீமோத்தேயுவுடன் பிடித்து கொள்பவராக இருந்தார். அவர்கள் தங்களுடைய ஆகாரத்திற்காக வேலை செய்தார்கள். கவனிக்கவும், எவ்வாறு இருப்பினும் வார்த்தையை பிரசங்கிக்கிறவனுக்கு அவர்களுடைய சபையானது அவர்களுக்கு உதவி செய்யக்கூடாது என்று பவுல் ஒரு போதும் சொல்லவில்லை.

**2 தெசலோனிக்கேயர் 3:9** “உங்கள் மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச் செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம்.”

பவுல் மற்றும் அவருடைய கூட்டாளிகள் தெசலோனிக்கேயா சபையின் மூலம் உதவிகள் பெறுவது நியாயமாயிருந்தது, ஆனால் அவர்கள் இந்த நேர்மையான நியாயத்தை தெசலோனிக்கேயர்களுக்கு மாதிரியாக வைக்க தெரிந்து கொள்ளவில்லை. சுவிசேஷத்தை பிரசங்கிறவனுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்புன்டாகும் என்று பவுல் மற்ற இடங்களில் தெளிவாக கற்றுக் கொடுக்கிறார் (பார்க்கவும் மத்தேயு 10:10 1கொரி 9:4-14, 1 தீமோ 5:17-18). பவுல் தாமாகவே விரும்பி வலியவந்து இந்த நேர்மையான நியாயத்தை தன்னுடைய மிஷனரி பிரயாணங்களில் கைவிட்டு மற்ற பிரயாண பிரசங்கியார்களை போல பண ஆதாயத்தை தேடுபவராக அவர் இல்லை.

பவுல் ஜெபத்துடன் முடித்தல்:

2 **தெசலோனிக்கேயர் 3:16** “சமாதானத்தின் கர்த்தர்தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக. கர்த்தர் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக.”

பவுல் தமது சொந்த கைகளினாலே வாழ்த்துதலுடன் இந்த நிருபத்தை முடித்து நிருபத்தின் உண்மையை போலியல்லவென்று காட்டுகிறார்:

2 **தெசலோனிக்கேயர் 3:17** “பவுலாகிய நான் என் கையெழுத்தாலே உங்களை வாழ்த்துகிறேன், நிருபங்கள்தோறும் இதுவே அடையாளம்; இப்படியே எழுதுகிறேன்.”

தப்பான நிரூபங்கள் பவுலின் மூலம் வந்தது என்று உரிமை கொண்டாடினது (பார்க்கவும் 2:2) “அதிமேதாவிதனத்திற்கு அடையாளம்” இது ஆக்கப்பட்டது, அது அவசியமானது – (பார்க்கவும் கலாத் 6:11).

## சுருக்க வர்ணனை

1. வாழ்த்து (1:1-2)
2. ஊக்கப்படுத்துதல் (1:3-12)
3. கர்த்தருடைய இரண்டாம் வருகை (2:1-17)
4. பொதுவான எச்சரிப்பு மற்றும் ஊக்குவிப்பு (3:1-15)
    a. ஜெபம் செய்வதற்கு ஊக்குவித்தல்
    b. வேலை செய்வதற்கு ஊக்குவித்தல் (3:6-15)
5. முடிவான தீர்மானம் ( 3:16-18)